# அலகு 1 வடிவியல்

## 1.1 ஒப்பீடுகள்

**கலைச்சொற்கள்**

உச்சி – அடி
உள்ளே – வெளியே
மேல் – அடியில்
மேலே – கீழே
தொலைவில் – அருகில்
பெரியது – சிறியது

### பயணம் செய்வோம்



அமர்க அமர்க அமர்க
வகுப்பிற்கு **உள்ளே** அமர்க;



குதிக்க குதிக்க குதிக்க
தரையின் **மேல்** குதிக்க;



தவழ்க தவழ்க தவழ்க
மேசைக்கு **அடியில்** தவழ்க;



செல்க செல்க செல்க
மேசையிலிருந்து **தொலைவில்** செல்க;




வருக வருக வருக
கரும்பலகைக்கு **அருகில்** வருக;



விளையாடு விளையாடு விளையாடு
வகுப்பிற்கு **வெளியே** விளையாடு.

### ஆசிரியருக்கான குறிப்பு

உச்சி – அடி, மேலே – கீழே, பெரியது – சிறியது ஆகிய இடம் சார்ந்த கலைச் சொற்களைப் பயன்படுத்தி ஆசிரியர் பாடலைப் புனைந்து பாடலாம்.

63FVPT



TN_GOVT_Maths_Tamil_Ch01_01-10.indd 1 26-12-2019 14:44:15

# உச்சி – அடி

## கற்றல்

நீல நிறப் புத்தகம் அடுக்கின் **உச்சியில்** உள்ளது.
சிவப்பு நிறப் புத்தகம் அடுக்கின் **அடியில்** உள்ளது.




## செய்து பார்

சறுக்கலின் **அடியில்** உள்ள சிறுவனை (✓) செய்க.





**உச்சியில்** உள்ள பானையை (✓) செய்க.



## முயன்று பார்


இங்குள்ள பொருட்களைப் பையில் எவ்வாறு அடுக்குவாய்? ஏன்?













TN_GOVT_Maths_Tamil_Ch01_01-10.indd 2 26-12-2019 14:44:25

# உள்ளே – வெளியே

## கற்றல்



பப்பாளி விதை பப்பாளிக்கு **உள்ளே** உள்ளது.



முந்திரியின் கொட்டை முந்திரிக்கு **வெளியே** உள்ளது.

## செய்து பார்

பட்டிக்கு **உள்ளே** இருக்கும் நாயை வட்டமிடுக.



கூட்டிற்கு **வெளியே** இருக்கும் குருவியை வட்டமிடுக.



## முயன்று பார்

இந்த விளையாட்டுகளை எங்கே விளையாடுவாய்? ஏன்?








## மேல் – அடியில்

### கற்றல்



**ஆசிரியருக்கான குறிப்பு**

**தொப்பி வியாபாரியும் குரங்குகளும்** கதையை ஆசிரியர் கூறி அதில் உள்ள கலைச்சொல்லான மேல்–அடியில் கருத்தினை வலுவூட்டலாம்.

## செய்து பார்

மேசையின் **அடியில்** உள்ள பொம்மையினை வட்டமிடுக.





மெத்தையின் **மேல்** உள்ள பந்தினை வட்டமிடுக.



## மகிழ்ச்சி நேரம்

பாலத்தின் **மேல்** செல்லும் தொடர் வண்டிக்கு **பழுப்பு** வண்ணமும் பாலத்தின் **அடியில்** செல்லும் கப்பலிற்கு **சிவப்பு** வண்ணமும் இடுக.





TN_GOVT_Maths_Tamil_Ch01_01-10.indd 5 26-12-2019 14:45:02

# மேலே – கீழே

## கற்றல்



நெற்றி மூக்கிற்கு **மேலே** உள்ளது.
வாய் மூக்கிற்குக் **கீழே** உள்ளது.

## செய்து பார்

மரத்தின் **கீழே** பறக்கும் பறவையை வட்டமிடுக.



நாட்காட்டிக்கு **மேலே** உள்ள கடிகாரத்தை வட்டமிடுக.



## மகிழ்ச்சி நேரம்

மேகங்களின் **மேலே** பறக்கும் விமானத்திற்குச் **சிவப்பு** நிறமும், **கீழே** பறக்கும் பட்டத்திற்கு **ஆரஞ்சு** நிறமும் இடுக.





TN_GOVT_Maths_Tamil_Ch01_01-10.indd 6 26-12-2019 14:45:03

# தொலைவில் – அருகில்

## கற்றல்



பேருந்து நிறுத்தத்திற்கு **அருகில்** பள்ளி பேருந்து உள்ளது.
பேருந்து நிறுத்தத்திற்குத் சற்று **தொலைவில்** மகிழுந்து உள்ளது.

## செய்து பார்

கால்பந்திற்கு **அருகில்** உள்ள சிறுவனின் சட்டைக்கு வண்ணமிடுக.



பால் கிண்ணத்திற்குத் **தொலைவில்** உள்ள பூனையை வட்டமிடுக.



## முயன்று பார்

பந்தயத்தில் வெற்றி பெறப்போவது யார்? ஏன்?







TN_GOVT_Maths_Tamil_Ch01_01-10.indd 7 26-12-2019 14:45:04

# பெரியது – சிறியது

## கற்றல்




சுறா **பெரியது**.　　　　மீன் **சிறியது**.

## செய்து பார்

**பெரியதை** (✓) செய்க.


**சிறியதை** (✓) செய்க.

## மகிழ்ச்சி நேரம்

**பெரிய** கேக்கிற்குப் **பழுப்பு** நிறமும் **சிறிய** கேக்கிற்கு **நீல** நிறமும் தீட்டுக.

63PRRG

## 1.2 வடிவங்கள்

### பயணம் செய்வோம்

**கலைச்சொற்கள்**

வளைவு,
தட்டை,
மூலை, விளிம்பு

63YHT4









மேற்காணும் பொருட்கள் போன்ற சிலவற்றை மேசையின் மீது பார்வைக்கு வைத்து, அவற்றினை மாணவர்கள் அடையாளம் காண ஆசிரியர் உதவுதல். மேலும், ஒவ்வொரு பொருளையும் தொட்டுப் பார்த்து, அப்பொருளின் பெயரைக் குறிப்பிட்டு அது வளைவானதா? தட்டையானதா? என மாணவர்கள் கூற ஆசிரியர் உதவுதல்.

### கற்றல்

 பந்து வளைவானது

 எழுது பலகை தட்டையானது

 புத்தகம் தட்டையானது

 சாத்துக்குடி வளைவானது

### செய்து பார்

வளைவான மற்றும் தட்டையான பொருட்களுக்கேற்பக் கீழ்க்காணும் பொருட்களை (✓) செய்க.


| பொருள் | வளைவான | தட்டையான |
|---|---|---|
|  | | |
|  | | |



TN_GOVT_Maths_Tamil_Ch01_01-10.indd 9 26-12-2019 14:45:07

# மூலை, விளிம்பு

## கற்றல்




## செய்து பார்

மூலைகளுக்கு வண்ணமிடுக





விளிம்பினை வரைக



## நீயும் கணித மேதைதான்






TN_GOVT_Maths_Tamil_Ch01_01-10.indd 10 26-12-2019 14:45:08